48

# கவனம் குவித்து நிலைநிற்குதல்

## (15:1-8)

ஆஸ்திரேலியாவில் எனது வாழ்வின் மன இறுக்கம் நிறைந்த காலகட்டம் ஒன்றில், நான் எனது கண்களைக் கவனம் குவிப்பதில் இடர்ப்பாடு கொண்டிருந்தேன். எனது பார்வையை நான் [ஒன்றில் இருந்து இன்னொன்றுக்கு] மாற்றியபோது, ஒவ்வொன்றும் மங்கலானதாயிற்று, காரோட்டுதல் எனக்கு அபாயமானதாக இருந்தது. கண்களின் கோளாறு, என்பதில் இருந்து மூளையில் கட்டிகள் என்பது வரையிலான பல சுகவீனங்கள் பற்றி மருத்துவர்கள் என்னை ஆய்வு செய்தனர். கடைசியில் அயர்ச்சி என்பதே எனது பிரச்சனை என்று மருத்துவர்கள் கண்டறிந் திருந்தனர். அந்த பிரச்சனை இருந்தபோது, அந்த உபத்திரவம் பயங்கர மானதாக இருந்தது. கவனம் குவிக்க முடியாதிருத்தல் என்பது அச்சமூட்டுவதாக உள்ளது.[1]

ஆஸ்திரேலியாவில் நான் கொண்டிருந்த மன இறுக்கம் என்பது தொடக்ககாலக் கிறிஸ்தவர்களால் அனுபவிக்கப்பட்ட மன இறுக்கத்துடன் ஒப்பிடப்படமுடியாது. அவர்கள் தேவன்மீதும், உண்மையில் பொருட் படுத்தப்பட வேண்டியவைகளின்மீதும் கவனம் குவித்திருத்தல் என்பது அவர்களுக்கு மிகவும் கடினமானதாக இருந்திருக்க வேண்டும். யோவானின் நாட்களிலும் இன்றைய நாட்களிலும், இந்தச் சரியான கருத்து நோக்கைக் காத்துக்கொள்வதற்குத் தத்தளிக்கும் கிறிஸ்தவர்களுக்கு உதவுதல் என்பது, வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டதற்கான ஒரு நோக்கமாக இருந்தது.

ஏழு கோபக்கலசங்களைப் பற்றிக் கூறுகிற 15 மற்றும் 16ம் அதிகாரங்கள், இந்த நோக்கத்திற்குப் பங்களிக்கின்றன. இந்தப் புத்தகத்திலேயே மிகச் சிறியதான 15ம் அதிகாரம், கலசங்களை அறிமுகப்படுத்துகையில், 16ம் அதிகாரமானது, அந்தக் கலசங்கள் ஊற்றப்படுவதைச் சித்தரிக்கிறது. நாம் இந்தப் பாடத்தில் 15ம் அதிகாரத்தைப் பற்றியும், தொடர்ந்து வரும் மூன்று பாடங்களில் 16ம் அதிகாரத்தைப் பற்றியும் படிப்போம்.

‘‘மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

*ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாத வைகளோ நித்தியமானவைகள்" (2 கொரிந்தியர் 4:17, 18) என்று பவுல் கூறியபோது, அவர் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் அறைகூவல் விடுத்தார். வெளிப்படுத்தின விசேஷம் 15ல் நாம், "காணப்படாத மூன்று விஷயங்களை" காண்கிறோம், நீங்களும் நானும் இவற்றின்மீது கவனம் குவிக்க வேண்டும்.*

## தேவனுடைய திட்டங்களின்மீது கவனம் குவியுங்கள் (15:1)

*இந்த அதிகாரம், "பின்பு, வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளத்தைக்[2] கண்டேன்" என்று தொடங்குகிறது (வசனம் 1அ). சூரியனை உடையாக அணிந்திருந்த பெண் ஒருத்தி (12:1) என்பது யோவான் கண்ட முதல் தரிசனமாயிருக்கையில், பெரிய சிகப்பான வலுசர்ப்பம் (12:3) என்பது அவர் கண்ட இரண்டாவது தரிசனமாயிருந்தது. இது "வேறொரு அடையாளமாக," இந்தப்புத்தகத்தின் மூன்றுவது மற்றும் கடைசியானதாக உள்ளது. முதல் அடையாளமானது தெய்வீக நோக்கத்தின் அடையாளமாயிருந்தது; இரண்டாவதானது சாத்தானுடைய எதிர்ப்பின் அடையாளமாயிருந்தது; மற்றும் இந்த மூன்றாவதானது நிறைவான வெற்றியின் அடையாளமாயிருக்கிறது.*

*யோவான் கண்ட "அடையாளம்" பின்வருமாறு: "கடைசியான வாதைகளையுடைய[3] ஏழு தூதர்கள் ... அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது"[4] (வசனம் 1ஆ).[5]*

*இது ஏழு நியாயத்தீர்ப்புகளின் மூன்றாவது மற்றும் கடைசி சுழற்சியாக உள்ளது: ஏழு முத்திரைகள் என்பது முதலாவதாக இருந்தது (4முதல் 7வரையுள்ள அதிகாரங்கள்), மற்றும் ஏழு எக்காளங்கள் என்பது இரண்டாவதாக இருந்தது (8முதல் 11வரையுள்ள அதிகாரங்கள்). மூன்றாவது வரிசைத்தொடர் 15:1ல், "ஏழு வாதைகள்" என்று அழைக்கப்படுகிறது.*

*"வாதை" என்ற வார்த்தையானது நமக்கு - "யார் உண்மையில் எல்லாவற்றையும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டிருக்கிறார் என்பதைப் பார்வோனுக்குக் காண்பிப்பதற்காக தேவன் நடத்தின பத்து தொடர் பாடப் பயிற்சிகளாய் இருந்த - எகிப்தியர்கள் மீது விழுந்த பத்து வாதைகளை நினைவூட்டுகிறது."[6] வெளிப்படுத்தின விசேஷம் 15 மற்றும் 16ம் அதிகாரங்களை நீங்கள் முழுமையாய் மதித்து உணர்வதற்கு, இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து தப்பிச்சென்ற காலத்தை நீங்கள் மறுகண்ணோட்டம் இடுவது அவசியமாக உள்ளது; ஏனென்றால் இந்த அதிகாரங்கள், "யோவானின் புத்தகத்தில் வேறு எவ்விடத்தைப் பார்க்கிலும் அதிகமாக, யாத்திராகமத்தின் மாதிரி அமைவை அதிகம் முழுமையாக மற்றும் முறையாகப் பயன்படுத்துவதாக" நாம் காணுகின்றோம்.[7] "வாதை" உருவகமானது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் முன்னதாகப் பயன்படுத்தப்பட்டது (9:20; 11:6), ஆனால் இந்த வாதைகள் தனிப்பட்ட*

வகையாக உள்ளன. இவைகள் ''கடைசியானவைகள்'' என்று அழைக்கப்படுகின்றன.[8]

இந்த அதிகாரத்தின் பிற்பகுதியில், வாதைகள், ''தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும்'' என்று அழைக்கப்படுகின்றன (15:7). நியாயத்தீர்ப்பின் மூன்று சுழற்சிகளும் சிலவகைகளில் இணையானவைகளாய் உள்ளன, ஆனால் இதில் பின்வரும் விளக்கப்படக்கூடிய ஒரு வளரமைவும் உள்ளது:

சுழற்சி 1 - முத்திரைகள் உடைக்கப்படுகின்றன: வெளிப்படுத்தல்.
சுழற்சி 2 - எக்காளங்கள் ஊதப்படுகின்றன: எச்சரிக்கை.
சுழற்சி 3 - கோபகலசங்கள் ஊற்றப்படுகின்றன: தண்டனை.

எக்காளங்களுக்கும் கலசங்களுக்கும் இடையில் ஒரு நெருங்கிய உறவு நிலவுகிறது,[9] ஆனுல் முக்கியமான ஒரு வித்தியாசம் தெளிவாக உள்ளது: எக்காளங்கள், பூமியில் மூன்றில் ஒரு பங்கைப் பாதித்தலுடன் வரையறைப் படுத்தப்பட்டிருந்தன (8:7-12; 9:15, 18), அதே வேளையில், கலசங்களின் செயல்விளைவுகளின்மீது வரையறை எதுவும் விதிக்கப்படவில்லை. பிடித்துவைத்துக் கொண்டது என்பது எதுவும் இருக்கவில்லை; தேவனுடைய கோபம் முழு பலத்துடன் ஊற்றப்பட்டது.

நமது அடுத்த எடுத்துரைப்பில் (பாடத்தில்) நாம் இந்த வித்தியாசத்தின் முக்கியத்துவம்பற்றிப் போராடுவோம். இப்போது நாம் நமது வசனப்பகுதியில் இருந்து வரும் இரண்டு பாடங்களின்மீது கவனம் குவிப்போம்: (1) தேவன் ஒரு திட்டத்தைக் கொண்டுள்ளார்; (2) தேவன் தமது திட்டத்தைச் செயல்படுத்துகின்றார்.

பின்வருபவை நினைவில் வைக்க வேண்டிய முக்கியமான சத்தியங்களாக உள்ளன: கொடுக்கப்பட்ட எந்த ஒரு காலகட்டத்திலும், நாம் தேவனுடைய நோக்கத்தைப் புரிந்துகொண்டாலும் புரிந்துகொள்ளாதிருந்தாலும், நமது வாழ்விற்கென்று தேவன் ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளார் மற்றும் அவரது நோக்கங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்பதில் நிச்சயமாய் இருக்க முடியும். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28).

வாழ்வில் தக்கவகையிலான கருத்துநோக்கத்தைக் காத்துக் கொள்வதற்கு, தேவனுடைய திட்டத்தின் மீது கவனம் குவியுங்கள்.

## தேவனுடைய வல்லமையின்மீது கவனம் குவியுங்கள் (15:2-4)

வாதைகளுடனான தூதர்கள் முதல் வசனத்தில் அறிமுகப்படுத்தப்படுவதால், அந்த ஐயோக்கள் செயல்படுத்தப்படுதல் என்பது உடனடியாகத் தொடருவதை நாம் எதிர்பார்க்கலாம்.

அதற்குப்பதிலாக, நாம் முதலில் ஆராதனைக் காட்சியொன்றைக் கொண்டுள்ளோம் (வசனங்கள் 2-4). (''அக்கினி கலந்திருந்த கண்ணாடிக்கடலின் மேல் ஜெயங்கொண்ட பரிசுத்தவான்கள்'' என்ற விளக்க படத்தைக் காணவும்.) ஆராதனை என்பது மூன்று சுழற்சிகளிலும் அடிப்படை அமைவின் பாகமாக இருந்துள்ளது: 4 மற்றும் 5ம் அதிகாரங்கள் நம்மை, ஏழு முத்திரைகளுக்கு ஆயத்தப்படுத்தின, மற்றும் அந்த அதிகாரங்களின் முழுமையாக்கப் பாகம், ஆராதனையின் இரு காட்சிகளால் ஏற்படுத்தப்பட்டிருந்தது (4:8-11; 5:8-14). ஏழு எக்காளங்களின் பகுதியில், எக்காளங்களுடன் இருந்த தூதர்கள் (8:2) ஊதுவதற்கு அனு மதிக்கப்படுவதற்கு முன்னர் (8:6, 7), முதலில் பரிசுத்தவான்களின் ஜெபங்கள் மேலே எழும்பின (8:3, 4). ஆராதனைக்கும் தேவனுடைய திட்டங்களும் நோக்கங்களும் நிறைவேறுதலுக்கும் இடையில் உள்ள உறவானது நமக்குத் தொடர்ந்து நினைவூட்டப்பட்டுள்ளது![10]

15ம் அதிகாரத்தில் உள்ள பரலோகத்தின் ஆராதனை பற்றிய தரிசனமானது, 14ம் அதிகாரத்தின் முடிவில் உள்ள நியாயத்தீர்ப்பு பற்றிய தரிசனங்களை உச்சக்காட்சிப்படுத்தி, நியாயத்தீர்ப்பின் நாளைத் தொடர்ந்து, இரட்சிக்கப்பட்டவர்கள் யாவரும் தேவனுடைய அரியணைக்கு முன்பாக நிற்பதைச் சித்தரிக்கிறது என்றும் சில எழுத்தாளர்கள் நம்பி இணங்கியுள்ளனர். இந்தத் தரிசனமானது யோவானின் நாட்களில் மரித்திருந்த உண்மையுள்ள கிறிஸ்தவர்களைச் சித்திரிக்கும் முற்றான புதிய பகுதியாக உள்ளது என்று நான் நம்புகின்றேன்:

(1) இந்த தரிசனமானது, ஒரு புதிய பகுதிக்கான ஆயத்தமாக உள்ளது: ஏழு கோபக்கலசங்கள் ஊற்றப்படுதல்.

(2) "கடல்" என்ற தடை இன்னமும் நிலவியது (4:6; 15:2); ஆனால் நாம் அறிந்துள்ளபடி, காலத்தின் கடைசியில் "சமுத்திரமும் இல்லாமற் போகும்" (21:1).

(3) தேவனுக்குப் பயப்படுபவர்களும் மக்களினங்களும் தேவனுக்கு முன்பாக வருதலைப் பற்றிப் பாடகர்கள் உரைத்தபோது, அவர்கள் எதிர்கால வினைச்சொல்லைப் பயன்படுத்தினர் (15:4).

இருப்பினும், நாளாகம வரிசை என்பது மிகவும் முக்கியமான விஷயமாக இருப்பதில்லை.[11] இவ்வசனங்கள், வெற்றியின் காட்சியொன்றைச் சித்தரிக்கின்றன என்பதே முக்கியமானதாக உள்ளது.

யோவான், "அக்கினிகலந்த கண்ணாடிக் கடல்போன்ற[12] ஒரு கடலை" கண்டதாகக் கூறினார் (வசனம் 2அ). 4:6ல் நாம், "அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது'' என்று கண்டோம். கடலின் நிலவுகையானது, குறிப்பாக, நாம் மாம்சத்தில் இருக்கையில், தேவனுடைய அணுக இயலாத இயல்பை குறிக்கலாம் என்று நாம் குறிப்பிட்டு இருந்தோம். 15ம் அதிகாரத்தில் ஒரு புதிய விபரம் கூட்டப் பட்டுள்ளது: கண்ணாடிக்கடலில் "அக்கினி கலந்திருந்தது.''[13] ஒருவேளை இந்த அக்கினி என்பது, வெற்றிகொண்டவர்கள் கடந்து வந்திருந்த "பற்றியெறிகிற அக்கினி" (சோதனைகள்) என்பதையோ (1 பேதுரு 4:12) அல்லது ஊற்றப்படவிருந்த தேவனுடைய அக்கினிபோன்ற

கோபத்தையோ (வெளிப்படுத்தின விசேஷம் 16:8, 9) குறிப்பிடுவதாகவோ இருக்கலாம்.[14]

"அந்தக் கண்ணாடிக் கடல் அருகே" நின்றிருந்தவர்களை யோவான் கண்டார் (வசனம் 2இ). NIV வேதாகமத்தில் இது, "standing *beside* the sea" என்றுள்ளது. "On" அல்லது "beside" (தமிழில் "அருகே") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க முன்னிடைச் சொல்லானது சாதாரணமாக, "on" அல்லது "upon" என்று அர்த்தப்படுகிறது, ஆனால் இது "up to" அல்லது "by" என்று மொழிபெயர்க்கப்படவும் கூடும். இவ்விடத்தில் இது "by" அல்லது "beside" என்று அர்த்தப்படுவதாய் இருந்தால், நாம் இதற்கு இணையாக, இஸ்ரவேல் மக்கள் செங்கடலின் கிழக்குக் கரையில் நின்ற நிகழ்ச்சியைக் கொண்டுள்ளோம். நாம், NASB வேதாகமத்தின் "on" என்பதைத் தக்கவைத்துக் கொண்டால், இவ்வசனப்பகுதியானது கடல் தடையானது அவர்களை நிறுத்திவைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது; அவர்கள் தேவனுடைய பரிசுத்தமான பிரசன்னத்திற்குள் வெற்றிகரமாய் வந்துகொண்டிருந்தனர்.[15]

கடலின் அருகில் *யார்* நின்றுகொண்டிருந்தனர் என்பது மிகவும் முக்கியமான விபரமாக உள்ளது: "மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள்"[16] (வசனம் 2ஆ). மிருகமானது அவர்களுக்கு எதிராக மூர்க்கம் கொண்டிருந்தது; அதன் சொரூபத்தை வணங்கும்படி அவர்கள்மீது வலியுறுத்தம் இடப்பட்டிருந்தது; பொருளாதார ஆணையுரிமைகள் தடைசெய்யப்பட்டிருந்தன;[17] ஆனால் அவர்கள் மரணபரியந்தம் உண்மையாய் இருந்தனர்.[18] இவ்விதமாக அவர்கள் வெற்றியாளர்களாய் நின்றனர்! வேதசாட்சியாக மரித்தவர்கள் பற்றிய பதிவேடு ஒன்றில் நாம், "அவர்களுடைய வெற்றியின் நாளானது உதித்தது, அவர்கள் பரலோகத்திற்கு நடந்து செல்லுகின்றவர்கள்போல, முகநாடியில் மகிழ்வுடனும் தெளிவுடனும், சிறைச்சாலையில் இருந்து ஆம்ப்பி தியேட்டருக்கு நடந்து சென்றனர்."[19]

வெற்றியாளர்கள் "தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு" இருந்தனர் (வசனம் 2ஈ). வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் நாம் இதற்கு முன்பு, சுரமண்டலங்களின் அடையாளத்துவத்தை இருமுறை கண்டுள்ளோம் (5:8; 14:2); இது மூன்றாவது மற்றும் கடைசி முறையாக உள்ளது. இந்நேரம் நீங்கள், இவைகள் நேரடி அர்த்தத்தில் சுரமண்டலங்கள் அல்ல என்று அறிந்திருப்பீர்கள்.[20] ஆல்பெர்ட்டஸ் பயட்டரஸ் என்பவர் எழுதியுள்ளபடி, 15 மற்றும் 16ம் அதிகாரங்களில் "நேரடி அர்த்தம் கொள்ளுதல்" என்பது "நம்பிக்கையற்றதாக" உள்ளது: "தேவனுடைய கோபத்தை ஒருவர் எப்படி கலசத்தில் இட்டு, அதைச் சூரியன்மீது ஊற்ற முடியும்?"[21] ஜார்ஜ் லேடு என்பவர், சுரமண்டலங்கள் எனப்படுபவை, "தேவனைத் துதித்தல் மற்றும் ஆராதித்தல் ஆகியவற்றின் சொல் விளக்கங்களாக உள்ளன"[22] என்று வலியுறுத்தினார். A. பிளம்மர் என்பவர், இவை "பரலோக இன்னிசைகளின்" அடையாளத்துவமாய் உள்ளதாக விவரித்தார்.[23]

*3ம் வசனம், வெற்றிக்குழுவினர் பாடிக்கொண்டிருந்த பரலோக இன்னிசையைப் பெயரிட்டு அழைக்கிறது: "அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய[24] மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியான வருடைய பாட்டையும் பாடினர்" (வசனம் 3அ). லேடு என்பவர் பின்வரும் கவனித்தலை ஏற்படுத்தினார்:*

> *இலக்கணரீதியாக இந்த மொழிநடையானது, இரண்டு பாடல்களைக் கருத்தாகத் தெரிவிப்பதாகக் காணப்படலாம்: ஒன்று மோசேயினு டையதாகவும் இன்னொன்று ஆட்டுக்குட்டியானவருடையதாகவும் உள்ளது. வெற்றியாளர்கள் வெற்றியின் பாடலைப் பாடுகின்றனர் என்பது, பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டின் காலத்திலும் இருந்த பரிசுத்தவான்கள், எவ்வாறு பாடுவது என்று அறிந்திருந்தனர் என்பதே சந்தர்ப்பப்பொருளின் கருத்தாக உள்ளது, ஏனென்றால் இவ்விருதரப்பாருமே ஒரே தேவன் அருளிய விடுதலையைப் பற்றியே பாடினர்.[25]*

*இஸ்ரவேல் மக்கள், செங்கடலின் கிழக்குக் கரையில் பாதுகாப்பாகச் சென்று சேர்ந்து இருந்தபோது அவர்களால் "மோசேயின் தோற்ற காலப்பாடல்" பாடப்பட்டது:[26]*

> *கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள். அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்து பாடின பாட்டு,*
>
> *கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்;*
> *குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார்.*
> *கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்;*
> *அவர் எனக்கு பெலனும் என் கீதமுமானவர்;*
> *அவர் எனக்கு இரட்சிப்புமானவர்;*
> *அவரே என் தேவன்; அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்*
> *பண்ணுவேன்;*
> *அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்;*
> *நீர் மீட்டுக்கொண்ட இந்த ஜனங்களை உமது கிருபையினாலே*
> *அழைத்து வந்தீர்;*
> *உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்துக்கு நேராக அவர்களை உமது பலத்தினால் வழிநடத்தினீர் (யாத்திராகமம் 14:31-15:13).*

*"இந்தப் பாடல் ... ஓய்வுநாளின் மாலைவேளைகளில் ஜெப ஆலய ஆராதனையில் பாடப்பட்டது. இதன் உருவகமானது பக்தியுள்ள ஒவ்வொரு யூதருடைய மனச்சாட்சியிலும் பதிந்திருந்தது."[27]*

*மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவர் ஆகிய இருவருமே தேவனு டைய மக்களைப் பாதுகாப்பிற்கு வழிநடத்தியபடியால், 15:3ன்*

வெற்றிப்பாடலில் இவ்விருவரின் பெயர்களும் இணைக்கப்பட்டுள்ளன. மோசேயையும் மேசியாவையும் "முதல் விடுதலையாளர் மற்றும் கடைசி விடுதலையாளர்"[28] என்று இரபீக்கள் குறிப்பிட்டனர். பார்வோனிடத்தில் இருந்து பாதுகாப்பாய் இருந்தவர்கள் வெற்றிப்பாடல் ஒன்றைப் பாடியது போலவே, இப்போது ராயரிடத்தில் இருந்து பாதுகாப்பாய் இருந்தவர்கள் தங்கள் வெற்றிப்பாடலைப் பாடினர்: பூமியில் அவர்கள் குழப்பங்கள் கொண்டிருந்தனர்; இப்போது அவர்கள் அமைதியைக் கொண்டிருந்தனர். பூமியில் அவர்கள் துன்பத்தைக் கொண்டிருந்தனர்; இப்போது அவர்கள் வெற்றியைக் கொண்டிருந்தனர். பூமியில் அவர்கள் பெருமூச்சைக் கொண்டிருந்தனர்; இப்போது அவர்கள் ஒரு பாடலைக் கொண்டிருந்தனர்.[29]

அனேகமாக, அவர்களின் வெற்றிப்பாடல் கர்த்தர்மீது கவனம் குவித்திருந்தது என்பது அதன் மிகக்குறிப்பிடத்தக்க பண்பாக இருக்கலாம். அவர்கள் தாங்கள் உயிர்தப்பிப் பிழைத்திருந்த பிரச்சினைகளைப் பற்றிப் பாடவில்லை, ஆனால் தேவனுடைய வல்லமை காண்பிக்கப்பட்டு இருந்ததைப் பற்றிப் பாடினர்; அவர்கள் சாதித்தவைகளைப் பற்றி அல்ல, ஆனால் கர்த்தர் செய்திருந்தவைகளைப் பாடினர். இந்த கீர்த்தனையில், ("நாம்," "எங்கள்," "எங்களுடைய" என்ற) தன்மைச் சிறப்புப் பெயர்ச் சொற்கள் காணப்படுவதில்லை, படர்க்கைப் பெயர்ச்சொற்களே தேவனைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளன:

> சர்வவல்லமையுள்ள[30] தேவனாகிய கர்த்தாவே,
> தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்,
> பரிசுத்தவான்களின்[31] ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும்
> சத்தியமுமானவைகள்.
> கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை
> மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்?
> தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு
> முன்பாகத் தொழுதுகொள்வார்கள்;
> உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின (வசனங்கள்
> 3ஆ, 4).[32]

இதை ஜார்ஜ் லேடு என்பவர், "வேதாகம இலக்கியம் முழுவதிலும், விசுவாசத்தைப் பற்றியதான, இருதயத்தை மிகவும் அசைக்கும் சொல் விளக்கங்களில் ஒன்று"[33] என்பதாக அழைத்தார். "இந்தப்பாடல் பழைய ஏற்பாட்டின் பல பகுதிகளில் இருந்து பெறப்பட்ட மேற்கோள்களின் தொகுப்பாக உள்ளது,[34] ஆனால் யோவான் இவையாவற்றையும் கிறிஸ்தவரின் ஒளிநோக்குக் கொள்கையின் மகிழ்பொங்கும் கீதமாக்கும் வகையில் ஒன்றுகூட்டி அமைத்தார்."[35] இந்த கீதம் மூன்று உறுதிப் பாடுகளைச் சொல்விளக்கப்படுத்திற்று (வசனம் 3ஆ). இது நிகழ்காலத்தில் தேவன் செய்துகொண்டிருந்தவை பற்றி நம்பிக்கையைச் சொல்விளக்கப் படுத்திற்று: இது கடந்த காலத்தில் தேவன் செய்து கொண்டிருந்தவை பற்றி நம்பிக்கையைச் சொல்விளக்கப்படுத்திற்று (வசனம் 3இ). இது

எதிர்காலத்தில் தேவன் செய்யவிருப்பவை பற்றி நம்பிக்கையைச் சொல் விளக்கப்படுத்திற்று: "கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? ... எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாக தொழுதுகொள்வார்கள், ..." (வசனம் 4).

''எல்லா ஜாதிகளும்'' என்ற கூற்று, உலகளாவிய இரட்சிப்பிற்கு ஆதாரமாக உள்ளது என்ற வகையில் இதைப் பயன்படுத்தச் சிலர் முயற்சி செய்துள்ளனர், ஆனால் எல்லாரும் இரட்சிக்கப்படுவது இல்லை என்பதை வேதாகமம் தெளிவாக எடுத்துரைக்கிறது (மத்தேயு 7:13, 14). இந்தச் சொற்றொடராக்கம் ஒவ்வொரு மக்களினத்திலும் இருந்து மக்கள் கர்த்தரிடம் வருவார்கள் என்ற உண்மையைக் குறிப்பிடக் கூடும் (வெளிப்படுத்தின விசேஷம் 5:9; 7:9ஐக் காணவும்).[36] இதற்கு மறுபுறத்தில் இந்தக் கூற்றானது, நியாயத்தீர்ப்பின் நாளில், முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் மற்றும் நாவுகள் யாவும் "இயேசுகிறிஸ்து கர்த்தரென்று அறிக்கைபண்ணும்படிக்கும்'' என்ற உண்மையைக் குறிப்பிடக்கூடும் (பிலிப்பியர் 2:10, 11). எவ்வகையிலும் இவ்வார்த்தைகள், கடைசியில் மனிதர்கள் - பேரரசனுக்கோ வேறெவருக்கோ அல்லது வேறெந்தப் பொருளுக்கோ அல்ல, ஆனால் - ஒரே தேவனுக்கு மாத்திரமே பயபக்தி செலுத்த வேண்டும் என்று ஒப்புக்கொள்வார்கள் என்பதை வலியுறுத்துகிறது.

''பரிசுத்தர்'' என்ற வார்த்தையின்மீது விசேஷித்த கவனம் செலுத்துங்கள்: "தேவரீர் ஒருவரே பரிசுத்தர்.'' தேவனுடைய பரிசுத்த தன்மையானது அவரது நியாயத்திற்கு நெருங்கிய வகையில் தொடர்புடையதாக உள்ளது:

> ... பரிசுத்தத்தின் தேவன் என்ற வகையில், அவர் பாவத்தைச் சகிக்க இயலாது (ஏசாயா 59:1, 2). இது அவரது இயல்பின் பாகமாக உள்ளது. ஆகையால், பாவம் என்பது தண்டிக்கப்பட வேண்டும் என்ற உண்மையானது தேவனுடைய மேம்போக்கான ஆணையாக இருப்பதில்லை, ஆனால் இது தேவனுடைய முற்றான பரிசுத்தத்தில் இருந்தும், பாவத்தின் இயல்பான தன்மையிலிருந்தும்கூட, தர்க்கரீதியாகப் பின்தொடருவதாக உள்ளது.[37]

பரலோகப் பல்லவி போலவே நாமும், நமது சுயத்தின்மீது என்பதற்குப் பதிலாக, தேவன்மீது கவனம் குவிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம் என்பதே, இந்தப்பாடலில் இருந்து நான் ஏற்படுத்த விரும்புகின்ற நடைமுறைப் பயன்பாடாக உள்ளது. நாம் கவனமாக இல்லாவிட்டால், நமது ஆராதனையின் வலியுறுத்தமானது நம்மேலேயே - அதாவது நாம் செய்துள்ளவை, நாம் செய்யாதிருப்பவை, நாம் செய்ய வேண்டியவை, நாம் செய்யக்கூடாதவை, நாம் செய்யத் திட்டமிட்டுள்ளவை என்பவற்றின் மேல் - இருப்பதாகிவிடும். இது முற்றிலும் மோசமானதாக இருப்பதில்லை; நாம் "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும்" ஏவப்பட வேண்டும் (எபிரெயர் 10:24), ''நம்மைக்குறித்த'' ஒரு சீரான சிந்தனையை/உணவைக் கொண்டிருத்தலானது, நம்மை ஆவிக்குரிய வகையில் கடும்பசியுடைய

வர்களாவும் ஆவியற்றவர்களாகவும் விட்டுவிடக்கூடும். நாம் செய்ய முடியாதவைகளாகவும், தேவன் மாத்திரமே செய்யக்கூடியவைகளாகவும் உள்ளவற்றின்மீது நாம் கவனம் செலுத்துதல் நல்லதாயிருக்கும்!

நமக்குத் தேவையான தைரியத்தை, நீண்ட காலத்திற்கு முன்பு, யோசபாத் என்ற அரசர் விளக்கப்படுத்தினார்: "எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன், தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது" (2 நாளாகமம் 20:6). நாம் கர்த்தருடைய பிரசன்னத்திற்குள் வரும்போது, அவரது வல்லமையின்மீது நாம் கவனம் குவிப்போமாக: அவர் என்ன செய்திருக்கின்றார், அவர் என்ன செய்து கொண்டிருக்கின்றார், அவர் என்ன செய்வதாக வாக்களித்திருக்கின்றார்!

## தேவனுடைய ஆயத்தத்தின்மீது கவனம் குவித்தல் (15:5-8)

வசனம் 1ல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆய்வுக்கருத்தை, வசனம் 5 தொடர்ந்து எடுத்துரைக்கிறது. யோவான், "இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது" என்று எழுதினார் (வசனம் 5). யாத்திராகமத்தின் அடையாளத்தைத் தொடர்ந்து, சீனாய் மலையின்மீது கட்டப்பட்டிருந்த (அதாவது கட்டுவதற்கான மாதிரி தரப்பட்டிருந்த) ஆசரிப்புக் கூடாரத்தின் மாதிரியொன்றை யோவான் கண்டார். வனாந்தரத்து ஆசரிப்புக் கூடாரமானது, "சாட்சியத்தின் (அல்லது சாட்சியின்) வாசஸ்தலம்" என்று அழைக்கப்பட்டிருந்தது (யாத்திராகமம் 38:21; எண்ணாகமம் 1:50; எண்ணாகமம் 9:15; 17:7; 18:2; நடபடிகள் 7:44ஐக் காணவும்), ஏனென்றால் அது, பத்து கற்பனைகள் செதுக்கப்பட்ட கற்பலகைகளைத் தனக்குள் கொண்டிருந்தது. இந்தக் கற்பலகைகள் "தேவனுடைய விட்டுக்கொடுக்க இயலாத வேண்டுகோள் மற்றும் மாற்றப்பட இயலாத நியாயம் ஆகியவற்றிற்குச் சாட்சியைக் கொண்டிருந்தன."[38]

"ஆலயம்" மற்றும் "கூடாரம்" ஆகிய இரண்டு வார்த்தைகளையும் ஒரே சொற்றொடரில் கொண்டிருத்தல் என்பது சற்று குழப்பமானதாக இருக்கிறது. சாதாரணமாக நாம், ஆலயத்தையும் கூடாரத்தையும் தனித்தனி அமைப்புகளாக சாலொமோனின் நாட்களில் கூடாரத்திற்குப் பதில் ஆலயம் எழுப்பப்பட்டதாக நினைக்கின்றோம். இவ்விதமாக, NEB வேதாகமத்தில், "the sanctuary of the heavenly Tent of Testimony" என்றுள்ளது.[39] சந்தர்ப்பப் பொருளில் *naos* என்பது அனேகமாக, கூடாரத்தில் இருந்த மகாப்பரிசுத்த ஸ்தலத்தைக் குறிப்பிடுவதாக இருக்கலாம், இது கற்பலகைகள் இரண்டைத் தனக்குள் கொண்டிருந்த உடன்படிக்கை/சாட்சியின் பெட்டி வைக்கப்பட்டிருந்த இடமாகும். யூதத்துவ காலத்தில், மகாப்பரிசுத்த ஸ்தலம் என்பது, தேவன் தமது மக்களை ஒரு விசேஷித்த வழிமுறையில் சந்திப்பதாக வாக்குத்தத்தம் செய்திருந்த இடமாக இருந்தது.

பரலோக செய்தியாளர்கள் உதிக்க அனுமதித்தல் என்பதே ஸ்தலம் திறக்கப்பட்டதற்கான நோக்கமாக இருந்தது:[40] மற்றும் ‘‘அந்த ஆலயத்திலிருந்து (நேரடியான அர்த்தத்தில் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து) ஏழு வாதைகளுடைய அவ்வேழு தூதர்களும் ... புறப்பட்டார்கள்’’ (வசனம் 6அ). இவ்விதமாக, அவர்கள் தேவனுடைய ஆணையை நிறைவேற்றுவதற்கு, அவரது பிரசன்னத்தில் இருந்து புறப்பட்டு வந்தனர் என்பது வலியுறுத்தப்படுகிறது.

தூதர்கள், ‘‘சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து, மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு’’ இருந்ததாக விவரிக்கப்படுகின்றனர் (வசனம் 6ஆ). விதிப்படி, வெளிப்படுத்தின விசேஷம் தூதர்களின் உடைகளைப் பற்றி விவரிப்பதில்லை. இந்த விவரிப்பானது, அவர்கள் தேவனுடைய தூதர்களாய் உள்ளனர் என்பதை மறுவலியூட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டது என்பது உறுதி: தேவன் பரிசுத்தராகவும் தூயவராகவும் இருக்கின்றார், எனவே அவர்கள் “சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து” இருந்தனர். முன்னதாக இயேசு, இராஜவஸ்திரம் தரித்து, “மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த”தாகத் சித்தரிக்கப்பட்டிருந்தார் (1:13); அந்த ஏழு தூதர்களும் அதேபோன்று உடுத்துவிக்கப்பட்டிருந்தனர்.[41]

“இடர்ப்பாட்டின் வேளையொன்றில், [அமெரிக்க நாட்டின்] அதிபதி தமது அமைச்சரவையைக் கூட்டும்போது, ... ஒவ்வொருவரும் அமைச்சரவையின் அறையை விட்டு வெளியே நடக்கும்போது, ஒவ்வொருவரும் அவர்களை உற்றுநோக்குகின்றனர். அவர்கள் என்ன கூறுவார்கள்? என்ன நடக்க வேண்டியுள்ளது?”[42] அதே வகையான இறுக்கம், தூதர்களின் நோக்கத்தைப் பற்றி வியப்புற்ற வேளையில் முதலாவது யோவானாலும் பின்பு அவரது வாசகர்களாலும், உணரப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் நீண்ட நேரம் யூகித்துக் கொண்டிருக்க வேண்டியிராதிருந்தது. “அப்பொழுது அந்த நான்கு ஜீவன்களில்[43] ஒன்று, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும் அந்த ஏழு தூதர்களுக்குங் கொடுத்தது”[44] (வசனம் 7).

4ம் அதிகாரத்தில் அரியணைக் காட்சியிலிருந்து நான்கு ஜீவன்களைப் பற்றி நினைத்துப்பாருங்கள்.[45] அவைகள் “அந்த சிங்காசனத்தின் மத்தியிலும் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும்’’ (4:6) - சர்வ வல்லவரின் பிரசன்னத்திலேயே வாசம் செய்கின்றன. அவற்றின் கரங்களில் இருந்து கலசங்களைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது தேவனாலேயே கட்டளையிடப்பட்டிருத்தலுக்கு ஒப்பாக உள்ளது.[46]

‘‘கலசங்கள்’’ என்பதற்கான கிரேக்க வார்த்தையானது, ஆழமற்ற, தட்டையான பாத்திரங்களாக, உள்ளே இருப்பதைச் சுலபமாக ஊற்றிவிடக்கூடிய வகையில் தேவாலயத்தில் இருந்த பாத்திரங்களைப் போன்றவற்றைக் குறிக்கிறது.[47] வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் அரியணைக் காட்சியில், இருபத்திநான்கு மூப்பர்கள் ‘‘பரிசுத்த வான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த

பொற்கலசங்களை"க் கொண்டிருந்தனர் (5:8) என்ற இன்னொரு இடத்தில் மாத்திரமே நாம் பொற்கலசங்களைப் பற்றி வாசிக்கின்றோம். ஒருவேளை நாம் மீண்டும், ஜெபத்திற்கும் தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறுதலுக்கும் இடையிலான தொடர்பைக் காணவிருக்கலாம்.

ஆயத்தக்காட்சியானது தனிச்சிறப்பு மிக்க ஒரு கடைசி விபரத்தைக் கொண்டுள்ளது: ''அப்பொழுது, தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது, ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும் வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது" (வசனம் 8).

இந்தக் காட்சியை நாம், பழங்காலச் கூடாரம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு நடந்ததாக யாத்திராகமம் 40:34, 35ல் வாசிக்கின்றோம்:

> ... ஒரு மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. மேகம் அதின்மேல் தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதால், மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது.[48]

அதுபோலவே, இந்தச் தரிசனத்தில், தேவனுடைய மகிமையானது பரலோக கூடாரத்தை நிரப்பிற்று, கோபகலசங்கள் ஊற்றி முடிக்கப்படும்வரை, அதற்குள் (கூடாரத்திற்குள்) எவரொருவரும் பிரவேசிக்க முடியாதிருந்தது.

சிலவேளைகளில் நாம், ஒரு கடையின் ஜன்னலில், "இருப்புக் கணக்கு எடுப்பதற்காக மூடப்பட்டுள்ளது'' என்ற அறிவிப்புப் பலகையைக் காணுகின்றோம். அங்குள்ள வேலையாட்கள் அவர்களின் இருப்பு கணக்கை முடிக்கும் முன்னர் அங்கு நுழைய முயற்சி செய்வது அவசியமில்லை என்று நாம் அறிகின்றோம். கூடாரத்தின் தரிசனத்தில், உண்மையில் பின்வரும் விளம்பரம் இருந்தது: "நியாயத்தீர்ப்புக்காக மூடப்பட்டுள்ளது!'' மனம் வருந்தாதவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு விழும் வரையிலும், எவரொருவரும் - மனிதர்களோ அல்லது தூதர்களோ - அவரது பிரசன்னத்திற்குள் நுழைய இயலாது. இரக்கத்தின் காலம் கடந்திருந்தது, வாய்ப்பிற்கான நாள் சென்றிருந்தது, கர்த்தருடைய கோபத்தைத் தடுத்து நிறுத்தக்கூடியது எதுவும் இல்லை.

இதைப் பற்றி நாம் அடுத்த பாடத்தில் இன்னும் விரிவாகக் கலந்துரையாடுவோம். இப்போதைக்கு, கோபக்கலசங்களை ஊற்றுவதற்கான தயாரிப்பில் உள்ளடங்கியிருந்த படிநிலைகளைக் கவனியுங்கள்:

(1) மகாப் பரிசுத்த ஸ்தலம் திறக்கப்பட்டது.
(2) தூதர்களுக்கு விசேஷித்த உடை தரப்பட்டது.
(3) தூதர்கள் கூடாரத்தை விட்டு வெளியே வந்தனர்.
(4) கலசங்கள் ஆயத்தப்படுத்தப்பட்டன.
(5) ஒரு ஜீவன், தூதர்களிடத்தில் கலசங்களைக் கையளித்தது.
(6) கூடாரத்தைப் புகை நிரப்பிற்று.

*ஒரு முக்கியமான கொள்கையை விவரிக்க நான் இந்த ஆயத்தப் படிநிலைகளை வலியுறுத்துகின்றேன்: எல்லா வேளைகளிலும் தேவன், விஷயங்களைச் சரியாக்குகின்றார், அல்லது அவர் விஷயங்களைச் சரியாக்குவதற்கு ஆயத்தப்படுத்துகின்றார். சிலவேளைகளில், தேவன் ஒன்றும் செய்வதில்லை என்று காணப்படுகிறபோது, அவர் சிலவற்றைச் செய்வதற்குத் தயாராகின்றார். சரியான வேளை வரும்போது, அவர் செயல்படுவார் - அதிலிருந்து அவரை ஏதொன்றும் தடைசெய்யாது.*

*‘‘எழுதியிருக்கிறபடி: ‘தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை’ ” (1 கொரிந்தியர் 2:9). தேவனுடைய ஆயத்தத்தின்மீது கவனம் குவியுங்கள். உங்கள் விசுவாசத்தைப் பற்றிக்கொண்டிருங்கள்.*

## *முடிவுரை*

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது நமக்கு, ஈரான், ஈராக், நவீன கால இஸ்ரவேல் அல்லது எகிப்து, அரபு, ஐரோப்பியப் பொதுச்சந்தை அல்லது மத்தியகிழக்கில் யுத்தம் போன்றவற்றைப் பற்றித் தகவல் அளிப்பதற்காக எழுதப்படவில்லை என்பது இந்நேரம் மிகவும் தெளிவாகியிருக்க வேண்டும்.[49] மாறாக இது, இடர்ப்பாட்டின் வேளைகளில் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஆறுதல்கூறிப் பலப்படுத்துவதற்காக எழுதப்பட்டது. தொடக்கால நூற்றாண்டுகளில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு 15ம் அதிகாரத்தின் சத்தியம் அவசியமாய் இருந்தது, அதுபோலவே நமக்கும் அவசியமாய் இருக்கிறது:*

*(1) தேவன் ஒரு திட்டத்தைக் கொண்டுள்ளார்.*
*(2) தேவன் தமது திட்டத்தைத் செயல்படுத்த வல்லமை கொண்டுள்ளார்.*
*(3) தேவன் தமது திட்டத்தைச் செயல்படுத்திக்கொண்டுள்ளார் - அது அவ்வாறு நமக்குத் தோன்றினாலும் இல்லையென்றாலும் அவர் அதைச் செயல்படுத்திக் கொண்டுள்ளார்.*

*இந்தக் கொள்கைகளின்மீது கவனம் குவித்தவர்களாய் நிலைத்திருங்கள், நீங்கள் வாழ்வில் எந்த சிரமங்களையும் வெற்றி கொள்ள முடியும்![50]*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

“மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவர் ஆகியோரின் பாடல்” என்பது இந்தப் பாடத்திற்கு மிகவும் பொதுவான தலைப்பாக உள்ளது. ‘‘விடுதலையின் பாடல்’’ மற்றும் ‘‘வெற்றியின் பாடல்’’ என்பவை

இதற்கொப்பான தலைப்புகளாக உள்ளன. வில்லியம் ஹென்ரிக்ஸென் என்பவர், "கண்ணாடிக்கடல்" என்ற தமது தலைப்பில் அகக் கருத்தை வலியுறுத்தினார் பீஸ்லீ - முர்ரே என்பவர், "கடைசி யாத்திராகமம்" என்ற தலைப்பைப் பயன்படுத்தி, 15ம் அதிகாரத்தில் யாத்திராகமம் மொழிநடையை வலியுறுத்தினார். ரால்ப் ஏர்ல் என்பவர் இந்த அதிகாரத்திற்குப் பின்வரும் வரைக்குறிப்பை முன்வைத்தார்: (1) காத்திருக்கும் தூதர்கள் (வசனம் 1); (2) வெற்றிகொண்ட பரிசுத்தவான்கள் (வசனங்கள் 2-4); (3) உதிக்கும் தூதர்கள் (வசனங்கள் 5-8).

இந்த வரிசைத் தொடரை நீங்கள் குறுக்க விரும்பினால், 15ம் அதிகாரத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விஷயங்களை முன்னுரையாகக் கொடுத்து, 15 மற்றும் 16ம் அதிகாரங்களின்மீது நீங்கள் ஒரே பாடத்தைப் பிரசங்கிக்க அல்லது போதிக்க முடியும்.

இந்த அதிகாரத்தில் உள்ள பாடல் (வசனங்கள் 2-4) மீது மாத்திரம் நீங்கள் ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கிக்க முடியும். இதற்கு இணையான பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளைக் குறிப்பிட முடியும். தேவன் கடந்த காலத்தில் தமது மக்களை எவ்வாறு விடுவித்தார் என்பதற்குப் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் இருந்து உதாரணங்களைத் தரமுடியும் - மற்றும் இன்றைய நாட்களிலும் தேவன் தமது மக்களை இன்னமும் விடுவிக்கின்றார் என்பதற்கு உதாரணங்களைத் தரமுடியும்.

---

குறிப்புகள்

[1]உங்கள் கண்களைக் கவனம் குவிக்க முடியாதிருந்த உங்கள் சொந்த அனுபவங்களை இவ்விடத்தில் பதிலியாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்: உதாரணமாக, இருட்டில் இருந்து வெளிச்சத்திற்குத் செல்லுதல், தலையில் அடிபட்ட பின்பு அல்லது முதன்முறையாக விழித்தெழுதல் முதலியன. [2]"அடையாளம்" என்ற வார்த்தையானது, சாதாரணமானதில் இருந்து புறம்பே இருக்கிற, குறிப்பிடத்தக்கதாக இருக்கிற ஒன்றைச் சுட்டிக்காண்பிக்கிறது. "பெரிதும் ஆச்சரியமுமான" என்ற வார்த்தைகள், இந்தச் சிந்தனைக்கு மறுவலிவூட்டுகின்றன. [3]இந்தத் தூதர்களுக்கு 7ம் வசனம் வரையிலும் உண்மையில் "வாதைகள்" தரப்படவில்லை; 1ம் வசனமானது இந்த அதிகாரம் முழுவதற்கும் தலைப்பு போன்று செயல்படுகிறது. [4]"கடைசியான" மற்றும் "முடிகிறது" என்ற சொற்றொடர்கள், அடுத்த பாடத்தின் முதல் பாதியில் கலந்துரையாடப்படும். அந்தக் கலந்துரையாடலை முன்னதாகக் கண்ணோக்க நீங்கள் விரும்பலாம். [5]கலசங்களைக் கைகளில் வைத்துள்ள ஏழு தூதர்களைப் பற்றிய சித்தரிப்பு ஒன்று இந்தப் பாடத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. முதல் கலசம் ஏற்கனவே ஊற்றப்பட்ட நிலையிலும் (ஒரு தூதன் தமது கையில் வெறுமையான கலசத்துடன் இருப்பதாகவும்), இரண்டாவது கலசம் ஊற்றப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் அதில் சித்தரிக்கப்பட்டுள்ளது. மேல்நோக்கிய முகத்துடன் இருக்கும் தூதர்கள் பின்வரும் இரண்டு சத்தியங்களை மறைவாக உணர்த்துகின்றனர்: அவர்கள் தேவனுடைய அறிவுறுத்துதல் இன்றி செயல்படுவதில்லை, மற்றும் தேவன் நேர்மையும் நீதியும் உடையவராகையால் அவரை அவர்கள் துதிக்கின்றனர். [6]John Risse, "The Last Word on Scripture," Sermon preached at the Southern Hills church of Christ in Abilene, Texas, on

16 September 1990. [7]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black, 1966), 197. [8]வெளிப்படுத்தின விசேஷத்தில் வாதைகள் *மீண்டும், 18:4, 8; 21:9; 22:18 ஆகியவற்றில் குறிப்பிடப்படும் - ஆனால் அந்த வசனப்பகுதிகள், 16ம் அதிகாரத்தின் வாதைகளைத் திரும்பக் குறிப்பிடுவனவாகவே உள்ளன.* [9]*இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள "தேவன் நினைவுகூரும்போது" என்ற பாடத்தில் காணவும்.* [10]*ஆராதனை என்பதை நேரத்தை வீணாக்குதல் என்று சிலர் நம்புகின்றனர், ''உலகத்தின் பிரச்சனைகள் குறித்து நாம் எதையாவது செய்யவேண்டும்" என்று அவர்கள் கூறுகின்றனர். தேவனை ஆராதித்தல் என்பதை உலகத்தின் பிரச்சனை குறித்து நாம் ''செய்ய'' முடிவதாக உள்ளது என்று வெளிப்படுத்தின விசேஷம் போதிக்கிறது!*

[11]*வெளிப்படுத்தின விசேஷத்தில் நாள்வரிசை அட்டவணை என்பது மிகவும் முக்கியமானதாக இருப்பதில்லை என்பதை நினைவில் வையுங்கள்; தரிசனங்கள் சில வேளைகளில் முன்னும் பின்னும் செல்லுகின்றன.* [12]*யோவான் கண்டவை நேரடி அர்த்தமானவைகள் அல்ல என்பதற்கான நினைவூட்டுதல்களை அவ்வப்போது நாம் காணுகின்றோம். இவ்விடத்தில், ''போன்ற'' என்பது அப்படிப்பட்டதொரு நினைவூட்டுதலாக உள்ளது.* [13]*இந்தக் காட்சி நேரடி அர்த்தமானதல்ல என்பதைக் குறிப்பிடுவது அவசியமாய் இருப்பதில்லை: கடல் தண்ணீரானது அக்கினியை அணைத்திருக்கும் அல்லது அக்கினியானது கடலை ஆவியாக்கியிருக்கும்.* [14]*இது ஆவிக்குரிய வகையிலான செங்கடலுக்கான குறிப்பு என்று சிலர் நம்புமளவுக்கு, இந்த அதிகாரத்தில் யாத்திராகம மொழிநடையானது மிகவும் மேலோங்கியுள்ளது. அக்கினி என்பது இந்தக் காட்சியை மேம்படுத்துவதற்கான ஒரு விபரமாக மாத்திரம் இருந்து, அடையாளத்துவ முக்கியத்துவம் எதுவும் கொண்டிராது இருப்பது என்பது சாத்தியமானதாகவே உள்ளது. சிலர் இவ்விடத்தில் சூரியன் மறைவின்போது உள்ள தண்ணீர் என்ற தோற்றத்தைக் காணுகின்றனர். எனது ஆஸ்திரேலிய நாட்டு அனுப வத்துடன் நான், "அக்கினி" (கல்லின் உள்ளே சிகப்பு வண்ண ஒளிச்சிதறல்கள்) நிறைந்த மாணிக்கக்கல் ஒன்றை நினைவுகூருகின்றேன்.* [15]வசனப்பகுதியானது ''on'' *என்பதற்கு ஆதரவாக உள்ளது; சந்தர்ப்பப்பொருளானது* ''by'' *என்பதை ஆதரிக்கிறது. இவ்விரண்டில் எது ஒன்றும் சாத்தியமானதாகவும் வேறு எந்த வசனப்பகுதியையும் மீறாததாகவும் உள்ளது.* [16]*"அவனது பெயரின் எண்ணானது" மிருகத்தைப் பின்தொடருபவர்களை வர்த்தகம் செய்ய அனுமதிக்கும் "அடையாளமாக" இருந்தது (13:16, 17) "அவனது பெயரின் எண்" என்பது பற்றிய விளக்கங்களுக்கு இந்தப்புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும், ''இது கூட்டப்படுவதாயிருப்பதில்லை!" என்ற பாடத்தில் காணவும்.* [17]*முந்திய குறிப்பைக் காணவும்.* [18]*15ம் அதிகாரத்தில் உள்ள, பரலோகத்து ஆராதனையாளர்களைப் பற்றிய தரிசனமானது, வேதசாட்சிகளாக மரித்தவர்களை மாத்திரமின்றி, மரணம் வரையிலும் உண்மையுள்ளவர்களாய் இருந்த யாவரையும் சித்தரிக்கிறது என்பதை நாம் மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகின்றோம் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10).* [19]Quoted in William Barclay, *The Revelation of John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 118. [20]*இவ்விஷயத்தில், அவர்கள் சுரமண்டலங்களைப் பிடித்திருந்தனர், ஆனுல், அவர்கள் சுரமண்டலங்களை மீட்டினர் என்று குறிப்பிடப்படவில்லை. மாறாக அவர்கள் பாடினர்.*

[21]Albertus Pieters, *Studies in the Revelation of St. John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1954), 243. [22]George Eldon Ladd, *A Commentary on the Revelation of John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 204-5. *சுரமண்டலங்கள் என்பவை "துதியின் அடையாளத்துவமாக" இருக்கின்றன என்று* ரே சம்மர்ஸ் கூறினார் (*Worhty Is the Lamb* [Nashville: Broadman Press, 1951], 184).

[23]Alfred Plummer, "The Revelation of St. John the Divine," in *The Pulpit Commentary,* vol. 22, *Epistles of Peter, John and Jude, The Revelation,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 382. [24]*மோசே அடிக்கடி, தேவனுடைய ஊழியக்காரர் என்று குறிப்பிடப்பட்டார் (யாத்திராகமம் 14:31; யோசுவா 14:7; 1 நாளாகமம் 6:49; தானியேல் 9:11).* [25]Ladd, 205. [26]*வெளிப்படுத்தின விசேஷம் 15:3, 4; உபாகமம் 32; 33; சங்கீதம் 90 ஆகியவற்றின் வார்த்தையமைப்பைப் பிரதிபலிக்கும் வகையிலான மற்ற பாடல்களையும் மோசே எழுதினார். இவைகளுடன் கூடுதலாக, (ஏவுதல் பெற்றிராத) யூதப் பாரம்பரியத்தின்படி, சங்கீதம் 91-100ஐ மோசே எழுதினார்.* [27]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 287. [28]Quoted in Martin H. Franzmann, *The Revelation to John* (St. Louis: Concordia Publishing House, 1976), 105. [29]This sentence and the two previous ones were adapted from Albert H. Baldinger, *Preaching From Revelation: Timely Messages for Troubled Hearts* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 84. [30]*"சர்வவல்லமையுள்ளவராக" இருத்தல் என்ற பண்பானது, வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவனுக்கு ஒன்பது முறை குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் புதிய ஏற்பாடு முழுவதிலும் இது மேலும் ஒரே ஒரு முறை மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது (2 கொரிந்தியர் 6:18). ரோமாபுரியின் வல்லமை மற்றும் பலத்தை எதிர்கொண்ட கிறிஸ்தவர்களுக்கு, கர்த்தரே எல்லாம் வல்லவராக இருக்கின்றார் என்பதை நினைவூட்டுவது அவசியமாய் இருந்தது.*

[31]*இவ்விடத்தில் வசனரீதியான பிரச்சினை ஒன்று நிலவுகிறது.* KJV *வேதாகமத்தில்* "King of saints" *என்றுள்ளது.* NIV *வேதாகமத்தில்* "King of the ages" *என்றுள்ளது. வேறுபாடுகள் முக்கியமற்றவைகளாய் உள்ளன: தேவன் சகலத்திற்கும் அரசராய் இருக்கின்றார்.* [32]*இந்தப்பாடல், சங்கீதங்களின் புத்தகத்தில் உள்ள பாடல்களுக்கு ஒப்பானதாக உள்ளது. முதல் நான்கு வரிகள்,* "synonymous parallelism" *என்ற வடிவமைப்பைப் பயன்படுத்துகின்றன: முதல் மற்றும் மூன்றாவது வரிகள் ஒத்தவையாய் உள்ளன, அதுபோல் இரண்டு மற்றும் நான்காவது வரிகள் ஒத்தவைகளாய் உள்ளன.* [33]Ladd, 205. [34]*முதல் மற்றும் இரண்டாவது வரிகளுக்கு, சங்கீதம் 92:5; 98:1; 111:2; 139:14 ஆகியவற்றைக் காணவும். மூன்றாவது மற்றும் நான்காவது வரிகளுக்கு, சங்கீதம் 145:17ஐக் காணவும். ஐந்தாவது வரிக்கு சங்கீதம் 86:9ஐக் காணவும். ஆறாவது வரிக்கு, 1 சாமுவேல் 2:2; சங்கீதம் 99:3; 111:9 ஆகியவற்றைக் காணவும். ஏழாவது வரிக்கு, சங்கீதம் 86:9ஐக் காணவும். கடைசி வரிக்கு சங்கீதம் 98:2ஐக் காணவும்.* [35]Caird, 198. *கேயர்டு என்பவர்* "collection" *என்ற வார்த்தைக்கு பதிலாக* "cento" *என்ற வார்த்தையை பயன்படுத்தினார்.* "Cento" *என்பது பல எழுத்தாளர்களின் எழுத்துக்களில் இருந்து ஒன்றுகூட்டப்பட்ட இலக்கியமாக உள்ளது.* [36]*"சகல" என்ற சொற்றொடரானது வேதாகமத்தில் சில வேளைகளில் இந்தக் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத்தேயு 3:5ஐக் காணவும்).* [37]David Roper, *Jesus Christ and Him Crucified* (Arvada, Colo.: Christian Communications, 1976), 41. [38]D. T. Niles, *As Seeing the Invisible: A Study of the Book of Revelation* (New York: Harper & Brothers, 1961), 84. [39]*என்னிடத்தில் உள்ள* NASB *வேதாகமத்தின் பிரதியில், "ஆலயம்" என்பதற்கான பக்க ஓரக்குறிப்பானது,* "sanctuary" *என்று கூறுகிறது.* [40]*11:19ல், உடன்படிக்கைப் பெட்டியை வெளிப்படுத்துவதற்காகப் பரிசுத்த ஸ்தலம் (ஆலயம்) திறக்கப்பட்டது; இவ்வேளையில் தூதர்களைப் புறப்பட அனுமதித்தல் என்பதே நோக்கமாயிருந்தது.*

[41]*உடையானது ஆசாரியத்துவ உடையைக் குறிக்கிறது என்று சிலர் நம்புகின்றனர், இது சாத்தியமானதாகவே உள்ளது.* [42]Jim McGuiggan, *The Book of*

*Revelation,* Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 229. [43]நான்கு ஜீவன்களில், தூதர்களுக்கு கலசங்களைக் கொடுத்தது எது? இதைப் பற்றி வசனப்பகுதி எதுவும் கூறுவதில்லை, மற்றும் இது பொருட்படுத்தப்படவேண்டியதாக இருப்பதில்லை. முன்னதாக இவைகள் நான்கு குதிரை வீரர்களை அழைத்த நாடகத்தில், இவை ஒவ்வொன்றும் "பேசும் பாகத்தை" கொண்டிருந்தன (6:1, 3, 5, 7). இப்போது, இவைகளில் ஒன்று, தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து கோபக் கலசங்களைக் கொண்டுவருவதில் "பேசுவதற்ற பாகத்தை" கொண்டிருந்தது. [44]இந்த அதிகாரத்தில், தேவனுக்கும் மிருகத்திற்கும் இடையில் பல நேர்மாறுகள் மறைமுகமாய்க் குறிப்பிடப்படுகின்றன: அவற்றில் பின்வருவது ஒன்றாக உள்ளது: மிருகம் இல்லாது போகும், ஆனால் தேவன் "என்றென்றைக்கும் ஜீவனுள்ளவராய் இருக்கின்றார்." ஆகையால் மிருகமல்ல ஆனால் தேவனே பயபக்தி செலுத்தப்பட வேண்டியவராக உள்ளார். [45]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் "விஷயங்களை கருத்துநோக்கில் இடுதல்" என்ற பிரசங்கத்தில், நான்கு ஜீவன்களைப் பற்றிய குறிப்புகளைக் காணவும். [46]கலசங்கள் இந்த ஜீவன்களிடத்தில் இருந்து வந்தன என்பதில் சிலர் கூடுதலான முக்கியத்துவத்தைக் காணுகின்றனர். அவர்கள், ஜீவன்கள் என்பவை இயற்கை முழுவதற்குமான அடையாளத்துவமாய் இருக்கலாம் என்ற உண்மைக்கும், பல கலசங்கள் என்பவை இயற்கைப் பேரழிவுகளைச் சித்தரிக்கலாம் என்ற உண்மைக்கும் இடையில் ஒரு பிணைப்பைக் கருத்தாகத் தெரிவிக்கின்றனர். இருப்பினும், தேவனுக்கும் ஏழு தூதர்களுக்கும் இடையில், இந்த ஜீவன்களில் ஒன்று இடைநபராக இருந்தது என்ற உண்மையில் "ஆழமான" முக்கியத்துவம் எதுவும் இல்லாதிருக்கலாம். [47]KJV வேதாகமத்தில் "vials" என்றுள்ளது, இவைகள் சாதாரணமாக, சிறிய குறுகலான கழுத்துப்பகுதியைக் கொண்ட பாத்திரங்கள் என்று நினைக்கப்பட்டன. [48]இதே விஷயம், தேவாலயம் கட்டி முடிக்கப்பட்ட போது நடைபெற்றது (1 இராஜாக்கள் 8:10, 11; 2 நாளாகமம் 5:13, 14ஐக் காணவும்). தேவாலயமானது தேவனுடைய மகிமையால் நிறைந்திருந்ததை தீர்க்கதரிசி கண்ட இடமான ஏசாயா 6:4 என்பது தொடர்புடைய வசனப்பகுதியாக உள்ளது. [49]This sentence was adapted from Milo Hadwin, *The Overcomers: Sermons on Revelation* (Arlington, Tex.: Mission Printing, n.d.), 157. [50]நீங்கள் இந்த பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால் உங்கள் உரையைக் கேட்பவர்களைத் தேவன் ஆசீர்வதிக்கக்கூடும்படிக்கு, அவர்கள் "தேவனிடத்தில் நெருங்கிச் சேரும்படி" அவர்களை ஊக்குவிக்க நீங்கள் விரும்புவீர்கள் (யாக்கோபு 4:8). கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறாதவர்கள் அதைச் செய்யவேண்டியது அவசியமாக உள்ளது (மாற்கு 16:15, 16: நடபடிகள் 2:36-38; கலாத்தியர் 3:26, 27). வெதுவெதுப்பாகியுள்ள கிறிஸ்தவர்கள் கர்த்தரிடத்திலும் கர்த்தருடைய சபையினிடத்திலும் மீளக்கட்டி எழுப்பப்பட வேண்டும் (நடபடிகள் 8:22; கலாத்தியர் 6:1; யாக்கோபு 5:16).

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. 7ம் வசனத்தில் "ஏழு வாதைகள்" என்று அழைக்கப்படுபவை எவை?
2. எகிப்தில் ஏழு வாதைகளை மறுகண்ணோட்டம் இடவும். அவற்றின் நோக்கம் என்ன?
3. வெளிப்படுத்தின விசேஷத்தில் "நியாயத்தீர்ப்பின் மூன்று சுழற்சிகள்" யாவை? இந்த சுழற்சிகள் இணைவானவைகளாய்

இருப்பினும், இவைகள் வளர்நிலையிலும் உள்ளன. அந்த வளர்நிலையை இந்தப்பாடம் எவ்வாறு வெளிப்படுத்துகிறது?

4. இதற்கு முன்பு, அரியணைக்கு முன்னால் இருந்த கடலைக் குறித்து நாம் கூறியுள்ளதை மறுகண்ணோட்டமிடவும். கடலில் "அக்கினி கலந்திருந்தது" என்று 15:2ல் கூறப்படுவதில் தனிச்சிறப்பு ஏதேனும் இருந்தால், அது என்ன?
5. இது வெளிப்படுத்தின விசேஷத்தில் சுரமண்டலங்கள் பற்றிய கடைசிக் குறிப்பிடுதலாக உள்ளது. இவைகள் நேரடியான அர்த்தத்தில் சுரமண்டலங்களாக உள்ளனவா?
6. யாத்திராகமம் 15ல் தோற்றகால ''மோசேயின் பாடலை'' மறுகண்ணோட்டமிடவும். எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் மக்களின் விடுதலையென்பது, பாவத்தில் இருந்து நமது விடுதலையுடன் எவ்வாறு இணைவுபடுகிறது?
7. ஜெயங்கொண்டவர்கள் மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலைப் பாடியபோது, அவர்களின் பாடலில் கவனம் குவிக்கப்பட்டது என்ன? அவர்கள் சகித்துக்கொள்ள வேண்டியிருந்த இடர்ப்பாடுகளை அவர்கள் குறிப்பிட்டனரா? அவர்கள், "கர்த்தாவே, நீர் ஏன் எங்களுக்கு உபத்திரவத்தை அனுமதித்தீர்?" என்று கேட்டனரா?
8. இந்தப் பாடலின் வெவ்வேறு வரிகளில் உள்ள சத்தியங்களை விவரிக்கும், வேதாகமரீதியான மற்றும் நவீனகால உதாரணங்களை உங்களால் நினைக்க முடிகிறதா?
9. இந்தப்பாடமானது '' 'நமது சுயத்தைப் பற்றிய' சீரான பத்தியமானது நம்மை ஆவிக்குரிய வகையில் பசிப்பிணியுடனும் ஆவியற்ற தன்மையுடனும் இருக்கும்படி விட்டுவிடும்'' என்று கூறுகிறது. இதை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா அல்லது கருத்து வேறுபடுகின்றீர்களா?
10. ஏழு தூதர்களின் உடையைப் பற்றி - மற்றும் அவைபற்றிய சாத்தியக்கூறான தனிச்சிறப்பு எவையேனும் இருப்பின் அது பற்றியும் - கலந்துரையாடவும்.
11. கூடாரமானது தேவனுடைய மகிமையென்ற புகையினால் நிறைந்திருந்தது என்று கூறுவது எதை அர்த்தப்படுத்துகிறது?
12. 15ம் அதிகாரத்தில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடமாக நீங்கள் எதை நினைக்கின்றீர்கள்?



“அக்கினி கலந்திருந்த கண்ணாடிக்கடலின் மேல்
ஜெயங்கொண்ட பரிசுத்தவான்கள்” (15:2)